# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு
*************

## ஊடக அறிக்கை

## இந்திய விமானப்படை விமானம் மூலம் நனோ நைட்ரஜன்

இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக இந்திய விமானப்படைக்கு சொந்தமான இரு சரக்கு விமானங்கள், நனோ நைட்ரஜன் உரத்தொகுதியுடன் நவம்பர் 04ஆம் திகதி காலையில் வருகை தந்துள்ளன.

2. இந்திய விமானப்படைக்கு சொந்தமான சி-17 குளோப்மாஸ்டர் விமானங்கள் இரண்டு 100,000 கிலோகிராம் எடையுள்ள நனோ நைட்ரஜன் உரத்துடன் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளன. இலங்கை விவசாயிகளுக்கு நனோ நைட்ரஜன் உரத்தினை வழங்குவதற்கான வாய்ப்புக்களை அதிகரிக்கவும் சேதன விவசாயத்தினை ஊக்குவிக்கும் இலங்கை அரசின் திட்டத்திற்கு ஆதரவினை வழங்கவும் இந்த உரத்தொகுதி விநியோகம் மிகவும் அவசியமானதாகும்.

3. இலங்கை விமானப்படையினருடனான நெருக்கமான தொடர்புகளுடன் சி-17 விமானங்கள் மூலமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. துரிதமான முறையில் இந்திய விமானப்படை விமானங்களை பணிக்கமர்த்தி ஒரே இரவில் அவற்றின் பயணத்தினை பூர்த்திசெய்தமையானது இரு படையினருக்கும் இடையிலான நெருக்கமான பிணைப்பினை பிரதிபலிக்கின்றது. இலங்கை விமானப்படையின் தலைமை தளபதி AVM பிரசன்ன பாயோ இவ்விமானங்களின் சிப்பந்திகளை வரவேற்றிருந்தார். அத்தியாவசியமான விடயங்களில் இந்திய விமானப்படையின் துரிதமான பதில்செயற்பாடுகள் மற்றும் தொடர் ஆதரவுக்காக தலைமை தளபதி அவர்கள் தனது நன்றியினை தெரிவித்திருந்தார்.

4. எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தினை அடுத்து பாதுகாப்பான கப்பல் பயணத்தை உறுதிப்படுத்துவதற்காக இந்திய கடற்படைக்கப்பலான சர்வேக்ஷாக் கொழும்புக்கு அப்பாலுள்ள கடற்பரப்பில் 2021 ஜுன் - ஜுலை காலப்பகுதிகளில் ஆய்வு நடவடிக்கையினை மேற்கொண்டிருந்தமை நினைவில்கொள்ளப்பட வேண்டியதாகும். அத்துடன் கொவிட் பெருநோயின் நான்காவது அலை நிலவிய காலப்பகுதியில் 100 தொன் திரவநிலை மருத்துவ ஒட்சிசனை வழங்குவதற்காக ஐ.என்.எஸ்.சக்தி பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

5. அயலுறவுக்கு முதலிடம் கொள்கையின் அடிப்படையில், நெருக்கடியான சந்தர்ப்பங்களில் இந்திய அரசாங்கம் இலங்கைக்கு தேவையான ஆதரவை வழங்குவதில்

உறுதியாகவுள்ளதுடன் பிராந்தியத்தில் முதலில் பதிலளிப்பவர் என்ற அடிப்படையில் அதன் ஆளுமையும் வகிபாகமும் தொடர்ச்சியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**********

கொழும்பு
04 ஒக்டோபர் 21